மாவட்ட ஆவணக்காப்பகம்

தஞ்சாவூர்

தண்டியாத்திரை நிகழ்வுகள் பற்றிய கண்காட்சி

DANDIYATRA

21-3-2006 முதல் 27-3-2006 வரை

காட்சிப் பொருட்களின் பட்டியல்

தண்டி நடைப்பயணம்

மனித குலத்தின் மிகச் சிறந்த அறப் போராட்ட தலைவர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியடிகளால், 75 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பெரிய அறப்போராட்டம் துவக்கப்பட்டது. அப்போராட்டம் தான், காந்தியடிகள் அகமதாபாத் சபர்மதியில் உள்ள சத்தியாகிரக ஆசிரமத்திலிருந்து, 1930-ஆம் ஆண்டு மார்ச் 12-ஆம் நாள் தன் வரலாற்று சிறப்பு மிக்க நடைப் பயணத்தை துவங்கி தண்டியை அடைந்து கொடுமைமிக்க உப்பு சட்டத்தை எதிர்த்து மேற்கொண்ட உப்பு சத்தியாகிரக போராட்டமாகும். காந்தியடிகள் தன் அறப்போராட்டத்திற்காக உப்பையும், போராட்டம் நடத்த தண்டியையும் தேர்வு செய்ததின் பின்னணியில் இரண்டு முக்கியமான காரணங்கள் இருந்தன. ஒன்று உப்பு அனைவராலும் பயன்படுத்தப்படும் பொருள். மற்றொன்று தண்டி அவருக்கு அரசியல் ரீதியில் பலமான ஆதரவு நிறைந்த இடமாக விளங்கியதாகும்.

காந்தியடிகளின் உயரிய தலைமையில், கடமையுணர்வுமிக்க 78 ஆசிரமத் தொண்டர்கள் (மேலும் இரண்டு தொண்டர்கள் இடையில் சேர்ந்து கொண்டனர்) தண்டியை நோக்கி நடைப்பயணம் மேற்கொண்டனர். தனது வயது முதிர்வையும், உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாது, நடைப்பயணத்தின் அன்றாட நிகழ்ச்சிகளான, காலை நேர கடவுள் வணக்கம், படுவேகமான நடை, மாலை நேர சொற்பொழிவுகள், தன்னிடம் நம்பிக்கை வைத்துள்ள பல்துறை தலைவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவற்றை நேரம் மற்றும் அதற்கென வகுக்கப்பட்ட வழிமுறைகளில் சிறிதும் பிறழாது தொண்டர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக தன் நடைப்பயணத்தை மேற்கொண்டார்.

காந்தியடிகள் ஈடு இணையற்ற உற்சாகத்துடன் 241 மைல்களை கடந்து இறுதியாக 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் 5-ம் நாள் தண்டியை வந்தடைந்தார். அடுத்த நாள் காலை (ஏப்ரல் 6, 1930) குளித்து தன் இறைவணக்கத்தை முடித்து கொண்ட, காந்தியடிகளும், தொண்டர்களும் ஆங்கில அரசின் அடக்குமுறை உப்புச் சட்டத்தை வெளிப்படையாக மீறுவதற்கு அடையாளமாக தண்டிக் கடற்கரையில் கையளவு இயற்கை உப்பை எடுத்தனர். அதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் எழுச்சியுடனும், முறையாகவும் காந்தியடிகளால் நாடு முழுவதும் பரப்பப்பட்டது. உப்பு சத்தியாகிரகத்தில் இளைஞர்கள் மட்டுமல்லாது பெண்களின் பங்கெடுப்பும் மிக இன்றியமையாதது என காந்தியடிகள் மிகவும் வலியுறுத்தினார்.

1930-ஆம் ஆண்டு மே 5-ஆம் நாள் காந்தியடிகள் கைது செய்யப்பட்டவுடன், அப்பாஸ் தயாப்ஜி போராட்டத்திற்கு தலைமையேற்றார். அவரும் கைதானவுடன் திருமதி சரோஜினி நாயுடு தலைமைப் பொறுப்பை ஏற்று, மே 15-ம் நாள், தரபிசனா உப்பளத்தில் புகுந்து போராட்டம் நடத்த முயற்சிக்கப்பட்டது. இப்போராட்ட முயற்சிகள் வெறித்தனமாக அடக்கப்பட்டாலும், காந்தியடிகளின் அரிய தலைமையில் போராட்ட வீரர்கள் தங்கள் வியத்தகு வீரத்தையும், ஒழுக்கத்தையும் உலகிற்கு பறைசாற்றினர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்பு முனையான வரலாற்று சிறப்பு மிக்க தண்டி நடைப்பயணத்தின் 75-ஆம் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி, இந்திய தேசீய ஆவணக்காப்பகமும், தமிழ்நாடு ஆவணக்காப்பகமும் இணைந்து காந்தியடிகளின் இணையற்ற ஆக்கத்தையும், ஊக்கத்தையும் போற்றும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

DANDI MARCH

75 Years ago, the world's greatest non-violent battle was launched by mankind's Greatest non-violent crusader, **Mohandas Karamchand Gandhi.** This was the historic Dandi March led by Gandhiji from the Satyagraha Ashram, Sabarmati, Ahmedabad, on **12 March 1930** culminating at Dandi, where he declared the breaking of the oppressive Salt Law. The choice of Salt and Venue of the Salt March took into account two very important factors : one, the universality of salt and second, choice of a location where Gandhiji's political base was potentially the strongest.

Displaying the highest degree of leadership, Gandhiji led 78 (a number which was augmented by two more participants at a later stage) devoted ashramites, towards Dandi. Inspite of his age and indifferent health, Gandhiji led by example and never deviated from the set pattern of the march, i.e. morning prayer, vigorous walking from one halt to the next, lunch halt, evening speeches, and regular correspondence with people from various walks of life who had reposed total faith in him.

With peerless fervour, Gandhiji covered a distance of **241 miles,** finally reaching Dandi on **5 April 1930.** In the morning of 6 April 1930, after bathing and offering prayers, a lump of natural salt was picked up by Gandhiji and his followers to symbolically and publicly violate the oppresssive Salt Law of British India. Thereafter, a vigorous and systematic campaign of civil disobedience was launched by Gandhiji all over India. Not only were the youth exhorted to participate in the Salt Satyagraha but for the first time, the importance of **women's participation** was also emphasized by Gandhiji.

After Gandhiji **was arrested on 5 May 1930, Abbas Tyabji** took on the leadership of the march. Subsequently, after he was arrested, **Smt. Sarojini Naidu** took up the mantle of leadership and raids on Dharasana salt works were attempted from 15 May 1930 onwards. Although these attempts were successfully and brutally repressed, incredible courage and moral strength was displayed by the Salt Satyagrahis across the country, showing the miracle of Gandhiji's leadership.

Commemorating the 75th anniversary of this historic march, a landmark in the struggle for India's independence, the **National Archives of India and Tamil Nadu Archieves** pay its tribute to the indomitable spirit and genius of **Gandhiji** through this exhibition.

List of Exhibits of "DANDI YATRA"

1. Citation of Kaudilya's Arthashastra

   கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்து மேற்கோள்.

2. Excerpts taken from History of British India, authored by James Mill, elucidating the various machinations undertaken by the East India company to gain sole monopoly of salt manufacture in India.

   திருவாளர் ஜேம்ஸ் மில் அவர்கள் எழுதிய பிரிட்டிஷ் இந்தியாவின் வரலாறு என்ற நூலிலிருந்து கிழக்கிந்திய கம்பெனியார் இந்தியாவில் உப்பு உற்பத்தியைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கிக் கொள்ள கையாண்ட பல்வேறுவிதமான உத்திகள் பற்றிய பகுதிகள்

3. Proposal of A. O. Hume, Commissioner, Inland Customs, for the prevention illicit trade in salt and regulation of its import, October 1869.

   அக்டோபர் 1869-ல் திருவாளர் ஏ. ஒ. ஹியூம், உள்நாட்டு சுங்கவரி ஆணையர் சட்டத்திற்கு புறம்பாக உப்பு தயாரிப்பு மற்றும் இறக்குமதி செய்வதை தடைசெய்து முறைப்படுத்தும் கருத்துருவினை தயாரித்தல்

4. Allan Octavian Hume, Commissioner of Inland Customs (1867-70)

   ஆலன் ஆக்டேவியன் ஹியூம், உள்நாட்டு சுங்கவரி ஆணையர் (1867-70)

5. Excerpts from minutes of John Strachey's containing explicit suggestions for adopting effective measures for the prevention of trade in illicit salt, October 1869.

   அக்டோபர் 1869-ல் சட்டவிரோதமான உப்பு வர்த்தகத்துறையை ஒடுக்கும் வகையில் திரு. ஜான் ஸ்டேச்சி அவர்கள் தயாரித்த விளக்க உரையின் சில சாராம்சங்கள்

6. Trade showing per head consumption of salt various provinces of British India, along with the corresponding figures of revenue collection (1866-67); excerpts from reports of the Financial Department on the subject of salt duty, 1868.

   பிரிட்டிஷ் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் தனி நபர் உப்பு உபயோகம் மற்றும் அது தொடர்பான வருவாய் வசூலிப்பு (1866-67) ஆகியவை அடங்கிய நிதித்துறையின் உப்பு வரி, 1868 அறிக்கையின் சாராம்சங்கள்.

7. A tabular showing a continuous decrease in Salt Tax over a period of fifty years (1878-1924), displaying an attempt to justify British economic policy as regards salt.

பிரிட்டிஷின் உப்பு மீதான பொருளாதார கொள்கையினை நியாயப்படுத்தும் முயற்சியாக 1878 முதல் 1924 வரையிலான 50 ஆண்டுகளில் உப்பு வரி தொடர்ச்சியாக சரிவை நோக்கிச் சென்று உள்ளதைக் காட்டும் விவர அட்டவணை.

8. A format of Salt Agreement of the British Indian Government made with the State of Gwalior in 1878. These negotiations were initiated with the princely states of Indian to secure salt revenue in these states, May 1879.

1878-ஆம் ஆண்டு குவாலியர் மாநிலத்துடன் பிரிட்டிஷ் இந்திய அரசு செய்து கொண்ட உப்பு ஒப்பந்தத்தின் மாதிரி அறிக்கை. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உப்பு வருவாயினை தொடங்க காரணமான 1879-ன் மே மாத அறிக்கைகள்.

9. Highlights of the salt treaties concluded with certain British Indian states, for regulating revenue accrued from salt manufacture, 31 May 1878.

31-5-1878-ஆம் ஆண்டு உப்பு தயாரிப்பின் மீதான வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக பிரிட்டிஷ் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுடன் செய்து கொண்ட உப்பு உடன்படிக்கையின் முக்கிய சாராம்சங்கள்.

10. **The Indian Salt Act comes into existence** : Powers of stoppage, search, seizure and arrest are discussed in the context of the implementation of the Act.

இந்திய உப்பு சட்டம் நடைமுறைப்படுத்துதல் : உப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் தேடுதல், பறிமுதல் செய்தல், நிறுத்துதல், மற்றும் கைது செய்வது போன்ற நிகழ்வுகளைச் செய்யும் நடவடிக்கை தொடர்பான ஆய்வு அறிக்கை.

11. Lord Ripon, Viceroy of India (1880-1884)

திருவாளர் ரிப்பன் பிரபு, இந்திய வைஸ்ராய் (1880-1884)

12. Demi-Official letter from A Tottenham, Central Board of Revenue to A.L. Hoyle, Commissioner, Northern India Salt Revenue, discussing Government concern regarding Gandhiji's proposed anti-salt campaign and pre-emptive measures to be taken for the same, 19 February 1930.

அ. டாட்டன்ஹாம், மத்திய வருவாய் வாரியம் அவர்களால் எ.எல். ஹோய்ல், கமிஷனர், வட இந்தியா உப்பு வருவாய் வாரியம் அவர்களுக்கு காந்திஜியின் உப்புவரி எதிர்ப்பு இயக்கத்தைக் குறித்தும், அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்தும் எழுதப்பட்ட 19-2-1930 நாளிட்ட நேர்முகக் கடிதம்.

13. An Article on Salt Tax, authored by Gandhiji. The article is an illuminating monograph on the nefarious and exploitative nature of the tax, reflecting Gandhiji's depth of understanding on the subject.

உப்பு வரி தொடர்பாக காந்திஜி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை உப்பு வரி மீதான பொருளில் காந்திஜி அவர்கள் கொண்ட ஆழ்ந்த புலமை அதன் மீதான தர்க்கத்தினை வெளிப்படுத்தும் விதமாக அறிக்கை அமைந்திருக்கிறதைக் காணலாம்.

14. Eleven point demand programme of Gandhiji which was rejected by the British Indian Government.

பிரிட்டிஷ் இந்திய அரசால் நிராகரிக்கப்பட்ட காந்திஜி அறிவித்த 11 அம்ச கோரிக்கை.

15. Telegram from the Viceroy to the Secretary of State for India, London apprising him of Gandhiji's intended plan of action regarding the Salt March, 5 March 1930.

1930-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5-ஆம் தேதி தண்டியாத்திரை மேற்கொள்ளும் காந்திஜியின் அறிக்கையின் மீதான மதிப்பீட்டினை பற்றிய விசாரணையினை கோரும் லண்டனில் இருக்கும் இந்திய அரசின் பிரதிநிதியின் செயலாளர் அனுப்பியுள்ள தந்தி வாசகம்.

16. Copy of Gandhiji's letter wherein he had urged the British Government to rethink its oppressive policies. The reply, however, decisively rejected such overtures, thereby closing the door on further dialogue.

மக்கள் விரோத அரசின் கொள்கையினை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தும் காந்திஜியின் கடித நகல். பதில் கடிதத்தில் காந்திஜியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடன்பாட்டிற்கான வழிகள் அடைக்கப்பட்டு விட்டன.

17. Mahatma Gandhi.

மகாத்மா காந்தி

18. Lord Irwin, Viceroy of India (1926-31)

இர்வின் பிரபு, இந்திய வைஸ்ராய் (1926-1931)

19. Sabarmati Ashram, as it looks today.

சபர்மதி ஆசிரமத்தின் இன்றைய தோற்றம்

20. Photograph of the 78 marchers at Sabarmati, on the eve of their departure towards Dandi. This was a dress rehearsal for the actual event which took place a day or two later.

தண்டியாத்திரை தொடங்குவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னதாகவே நடந்த ஒத்திகை நிகழ்வு. தண்டியாத்திரை துவக்க நாளில் ஆசிரமத்தில் தண்டியாத்திரையில் பங்கு கொள்ள இருந்த 78 யாத்திரிகர்களின் அரிய புகைப்படம்.

21. Route map covering the full itinerary of the historic Dandi March, which started from Sabarmati Ashram, Ahmedabad on 11 march 1930.

அகமதாபாத்தில் 11-03-1930-ஆம் நாளன்று தொடங்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தண்டியாத்திரையின் பல்வேறு இடங்களைக் காட்டும் வழித்தடத்தின் வரைபடம்.

22. A sea of empathy and support : Assemblage of people who had come to hear Gandhiji speak near Ellis Bridge, Ahmedabad.

அன்பையும் ஆதரவையும் காட்டும் மக்கள் வெள்ளம் : அகமதாபாத், எல்லிஸ் பாலத்தின் அருகில் பேசும் காந்திஜியின் பேச்சைக் கேட்க திரண்ட மக்களின் மாபெரும் கூட்டம்

23. Telegram from Mirabehn(a close disciple of Gandhiji) to Jawaharlal Nehru, intimating the rousing start of the Dandi March from Sabarmati Ashram, Ahmedabad.

அகமதாபாத், சபர்மதி ஆசிரமத்திலிருந்து கிளர்ச்சியூட்டும் தண்டியாத்திரை தொடங்கியதை ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு தந்தி மூலமாக மீராபென் (காந்திஜியின் நெருங்கிய சீடர்) அனுப்பிய தந்தி

24. Gandhiji alongwith Abbas Tyabji, statrting from Sabarmati Ashram, Ahmedabad towards dandi, inaugurating the Salt Satyagraha

அகமதாபாத், சபர்மதி ஆஸ்ரமத்தில் தண்டியை நோக்கி தொடங்கும் உப்பு சத்தியாகிரஹ யாத்திரையின் தொடக்க நிகழ்ச்சியில் காந்திஜியுடன் அப்பாஸ் தயாப்ஜி

25. Report on Mahatma Gandhi's letter to Viceroy published in **Hans** edited by Munshi Prem Chand, 1930.

1930-ஆம் ஆண்டு முன்ஷி பிரேம் சந்த் அவர்களால் ஹன்ஸ் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட, மகாத்மா காந்திஜி இந்திய வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தின் மீதான அறிக்கை.

26. A newspaper clipping of **The Tribune,** heralding the arrival of Gandhiji at Bareja, the second halt of the historic march, dated March 13, 1930. This article quietly confirms the immense popular appeal of the march.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தண்டியாத்திரையின் இரண்டாவது கட்டமாக தங்குமிடமாக பரோஜா இடத்தை காந்திஜி வந்து சேர்ந்ததை தெரிவிக்கும் 13-03-1930-ஆம் நாளிட்ட 'தி ட்ரிபியூன்' தினசரிப் பத்திரிக்கையின் துண்டுப் பிரசுரம்.

27. Excerpts from a demi-official letter of Acting Chief Secretary to the Government of Madras to H.G. Haig, Secretary to the Government of India, on the plan of acting to be adopted by the Salt Satyagrahis in Kistna and Guntur districts of Andhra Pradesh.

ஆந்திர மாநிலம் குண்டூர் மற்றும் கிருஷ்ணா மாவட்டங்களில் நடைபெறவிருக்கும் உப்பு சத்தியாகிரகத்தை எதிர்நோக்க எடுக்கவிருக்கும் நடவடிக்கை மற்றும் திட்டமிடலை, இந்திய அரசு செயலாளரான எச். அ. ஹியூக் அவர்களுக்கு மதராஸ் தலைமைச் செயலாளர் தெரிவிக்கும் நேர்முகக் கடிதத்தின் சாரம்.

28. Excerpts from a Government report of the Home Department on the initial days of the march to Dandi, although there is covert attestation of the growing popular appeal of the march, there is no real recognition of its popular merit, 18 March 1930.

தண்டி நோக்கி தொடங்கிய சரித்திர புகழ்மிக்க யாத்திரையின் தொடக்க நாட்களில் அதற்கு மக்களிடையே ஏற்பட்ட ஆதரவு மற்றும் வளர்ந்து வரும் புகழ் பற்றிய உள்துறையின் 18-03-1930 நாளிட்ட அறிக்கை. உண்மை நிலவரத்தை தெரிவிப்பதாக இந்த அறிக்கை இல்லை என்பதை அறியலாம்.

29. A detailed telegram from the Viceroy, to the Secretary of State for India, even which attempting to belittle and deny the growing popularity of the Dandi March, 31 March 1930.

தண்டியாத்திரைக்கு மக்களிடையே ஆதரவும், புகழும் செல்வாக்கும் பெருகுவதை மறைத்தும் மறுதளித்தும் இந்திய வைஸ்ராய் அவர்கள் இந்திய அரசிற்கான வெளியுறவு செயலருக்கு அனுப்பிய தந்தியின் விவர அறிக்கை.

30. Opinion of F.W. Allison, Remembrance of Legal Affairs, explaining the stage in the manufacture of salt which would be tantamount to the breach of the Salt Law, 18 March 1930.

சட்டத்துறை வல்லுநர் எப். டபிள்யூ. அல்லிசன் உப்பு உற்பத்தியின் நிலைமையையும் உப்பு சட்டம் மீறப்படுவதையும் சமமாக பாவிக்கும் கருத்தினை பிரதிபலிக்கும் 18-03-1930 நாளிட்ட விவர அறிக்கை.

31. Copy of a confidential letter forwarded from the Deputy Secretary to all the key district officials, exhorting them to observe atmost caution and vigilance in their respective districts, 24 March 1930.

முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்களின் அலுவலர்களுக்கு விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்குமாறு அறிவுறுத்தும் துணைச் செயலாளரின் மந்தண கடிதத்தின் நகல்

32. Notings of Home Department in connection with speeches delivered by Gandhiji at various stages of the March, starting from Ahmedabad to Borsad, 1 April 1930.

1-04-1930-ஆம் நாளில் அகமதாபாத்திலிருந்து பர்ஸாத்திற்கு புறப்படும் யாத்திரையின் ஒவ்வொரு நிலையிலும் காந்திஜியின் பேச்சு பற்றிய பல்வேறு நிலைகளை உள்துறைக்கு தெரிவிக்கும் குறிப்புகள்.

33. Excerpts from a confidential report on the political situation in the Punjab, reporting on the expected public response to the Salt Satyagraha in Punjab, with particular reference to the participation of the Shiromani Akali Dal, 1930.

பஞ்சாப் மாநிலத்தில் உப்பு சத்தியாகிரஹத்திற்கு மக்கள் ஆதரவு, செல்வாக்கு பற்றியும் அரசியல் நிலைமையை தெரிவிக்கும் மந்தண அறிக்கையின் சாரம், சத்தியாகிரஹத்தில் முக்கியமாக சிரோண்மணி அகாலிதளத்தின் பங்களிப்பு குறித்து 1930.

34. Certain sections of an inspirational poem composed on the salt satyagraha, excerpted from a prescribed publication entitled Namkeen Jung, brought out by Shri Baburam, Kanpur.

கான்பூரைச் சேர்ந்த ஸ்ரீ பாபுராம் அவர்களால் வெளியிடப்பட்ட நாம்கின் ஜங் என்ற வெளியீட்டில் உப்பு சத்தியாகிரஹப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் இணைக்கப்பட்ட ஆத்ம உத்வேகம்.

35. Sketch of Gandhiji, executed by Nadlal Bose.

நத்தலால் போஸ் அவர்களால் தீட்டப்பட்ட காந்திஜியின் ஓவியம்

36. Gandhiji's article in the Gujarati newspaper **Navjivan,** discussing the logistics, composition and the programme of the Dandi March.

தண்டி யாத்திரையின் காரிய காரண தொடர்பு மற்றும் செயல் முறைத்திட்டம் முதலியவற்றைப் பற்றி குஜராத்தி மொழி தினசரி நவஜீவன் பத்திரிக்கையில் காந்திஜி எழுதிய கட்டுரை.

37. Rare moments of repose; Gandhiji at Sabarmati Ashram.

காந்திஜி ஓய்வு எடுத்தல் பல்வேறு அரிய நிலைகளில் - சபர்மதி ஆஸ்ரமத்தில் காந்திஜி

38. On the beach at Dandi.

தண்டி கடற்கரையில்

39. An artist's impression of a Satyagrahi, Chandulal and his party, breaking the Salt Law.

சத்தியாகிரஹ ஓவியரின் கைவண்ணத்தில் சந்துலால் மற்றும் அவரது தொண்டர்கள் உப்பு சட்டத்தை மீறுவது

40. Contraband manufacture of salt at the beach in Madras.

சென்னை கடற்கரையில் சட்ட விரோதமாக உப்பு தயாரித்தல்

41. Scenes of Salt Satyagraha.

உப்பு சத்தியாகிரஹத்தில் பல்வேறு காட்சிகள்

42. Gandhiji at Dandi April 1930.

ஏப்ரல் 1930-ல் தண்டியில் காந்திஜி

43. Newspaper reports on commencement of salt satyagraha in Madras Province. It was reported that Kasinandini Nageswar Rao and T. Prakasam were arrested for conrtravening Sections 74 and 143 of Indian Salt Act by actively participating in Salt Satyagraha in Madras Province, **Andhra Patrika,** April 1930.

மதராஸ் மாகாணத்தில் தொடங்கிய உப்பு சத்தியாகிரஹம் பற்றிய செய்தித்தாள் அறிக்கை. மதராஸ் மாகாணத்தில் உப்பு சத்தியாகிரஹத்தில் மீறப்பட்டதாக கூறி சட்டப்பிரிவு 74 மற்றும் 143-ஐ மீறியதற்காக திருவாளர்கள் காசிநந்தினி நாகேஸ்வர்ராவ் மற்றும் டி. பிரகாசம் ஆகியோர்கள் கைது செய்யப்பட்டதாக ஆந்திரப் பத்திரிக்கையின் நாளிதழில் ஏப்ரல் 1930-ல் செய்தி வெளியிடல்

44. Message of Gandhiji

காந்தியின் செய்தி

45. Gandhiji received by Smt. Sarojini Naidu, on his arrival at Dandi.

காந்திஜி தண்டியை வந்தடைந்தபோது திருமதி சரோஜினி நாயுடு வரவேற்றல்

46. The making of history : Gandhiji breaking the oppressive salt law by picking up a lump of natural salt at Dandi beach, 6 April 1930.

1930, ஏப்ரல் 6-ம் தேதி காந்திஜி அவர்கள் கடுமையான உப்பு சட்டத்தை எதிர்த்து தண்டி கடற்கரையில் இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட உப்பை அள்ளி வரலாறு படைத்தார்.

47. Excerpts taken from an article in the newspaper **Satyagraha Samachar** covering varied aspects of the salt satyagraha in Gujarat, 23 April 1930.

24-3-1930 நாளிட்ட 'சத்தியாகிரஹ சமாச்சார்' தினசரியில் குஜராத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரஹத்தின் பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பு செய்தி அறிக்கை.

48. Report on the breach of Salt Law in different Provinces of Tamil Nadu and Andhra Pradesh, in the second half of April 1930.

ஏப்ரல் 1930-ன் இரண்டாம் பகுதி காலத்தில் ஆந்திரம் மற்றும் சென்னை மாகாணத்தில் உப்பு சட்டத்தை மீறியது தொடர்பான அறிக்கை.

49. Excerpts taken from a newspaper article in **Sathyagraha Smachar** describing the atrocities perpetuated by the police, at Chandauli, Uttar Pradesh.

உத்திரப்பிரதேசம், சநதௌலியில் காவல்துறையின் அத்துமீறல்கள் பற்றி 'சத்தியாகிரஹ சமாச்சார்' பத்திரிக்கையில் வெளியான செய்தி.

50. Satyagraha Gita - A prescribed publication.

சத்தியாகிரஹ கீதம் - தடை செய்யப்பட்ட வெளியீடு.

51. Dr. Annie Besant (centre) renowned Indophile of her times, with a group of Indian Nationalists registering their protest against the Salt Tax. To her left is the Hon'ble Mr. Rangacharia, Member of the Legislative Assembly.

உப்பு வரிக்கு தன்னுடைய எதிர்ப்பை இந்திய தேசிய வாதிகளிடையே டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் (மத்தியில் இருப்பவர்) தெரிவித்தல் - அவருக்கு இடது பக்கம் இருப்பவர் மதிப்பிற்குரிய திரு. ரங்காச்சாரியா, சட்டப்பேரவை உறுப்பினர்.

52. Extracts from the Fortnightly Report of the Government, covering Central Provinces and Berar and participation of eminent social activists such as Seth Govind Das, Dwarka Prasad Mishra and R.S. Shukla in Salt Satyagraha.

மத்திய மாகாணம் மற்றும் பீரார் ஆகிய பகுதிகளில் சமூக ஆர்வலர்களான சேத் கோவிந்த தாஸ், துவாரகா பிரசாத் மிஸ்ரா மற்றும் ஆர். எஸ். சுக்லா ஆகியோர் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கெடுத்துக் கொண்டது பற்றிய மாதமிருமுறை செய்யும் அறிக்கையில் அரசுக்கு தெரிவித்தல்.

53. Reproduction of the Government communique issued after the arrest of Gandhiji at Karadi.The exhaustive attention lavished in documenting Gandhiji's activities, attest to his immense popularity and recognition as a leader with great importance and impact.

காந்திஜி கைது செய்யப்பட்டு பின்னர் காரடியில் ஆஜர்படுத்தப்பட்டதற்கான அரசு செய்தி, காந்திஜியின் செல்வாக்கு, மதிப்பு மற்றும் மக்களின் அங்கீகாரம் ஆகியவை காந்திஜியை மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த தலைவராக அங்கீகரிக்கப்பட்டதற்கான முகாந்திரம்.

54. Gandhiji in his hut at the camp in Karadi, May 1930.

1930, மே மாதம், காரடி குடிசை முகாமில் காந்திஜி

55. Central Prison at Yeravada, Pune, where Gandhiji was interned after his arrest on 5 May 1930 at Karadi.

1930-ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள், காரடியில் காந்திஜி கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட புனே நகரம், எராவாடாவில் உள்ள மத்திய சிறை.

56. Excerpts from a Confidential Report, on the states of Western India from the Agent to the Governor General. the report honestly acknowledges the growing strength of the Civil Disobedience movement and admits to the Government's inability to subvert salt manufacturing activities, 1930.

இந்தியாவின் மேற்குப் பகுதியின் கவர்னர் ஜெனரலின் ஏஜெண்ட் அளித்த மந்தண அறிக்கை. 1930-ஆம் ஆண்டில் மக்களின் ஒத்துழையாமை இயக்கம் வளர்ந்து வலிமையடைந்து வருவதையும், அரசினால் சட்டவிரோத உப்பு தயாரிப்பினை கட்டுப்படுத்த இயலாத நிலையினையும் ஒப்புக் கொள்ளும் அறிக்கை.

57. Article in the newspaper The Hindustan Times reporting on the brutual police atrocities inflicted upon the Salt Satyagrahis in Delhi, 8 April 1930.

'தி ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிக்கையில், தில்லியில் 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் 8-ம் நாள் உப்பு சத்தியாகிரகிகள் மீதான போலீஸின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதல் பற்றிய செய்தி வெளியிடல்.

58. Excerpts from a letter to the Secretary, Government of India, from the Home Department, Simla reporting on salt manufacturing activities in Delhi. The report attests the encouraging response the salt satyagraha received in Delhi from all sections of society and also to the participation of women in the salt satyagraha, 11 April 1930.

டெல்லியில் உப்பு தயாரிக்கப்படுவதை தெரிவிக்க சிம்லாவில் உள்ள உள்துறை இந்திய அரசின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம், 11-4-1930-ஆம் நாளிட்ட செய்தியில் டெல்லியில் பல்வேறு சமூக அமைப்புகளிடையே உப்பு சத்தியாகிரஹம் ஊக்குவிக்கப்படுவதையும், இதில் மகளிரும் பங்கெடுத்துக் கொள்வது பற்றியுமான அறிக்கை.

59. Order from the Chief Commissioner, Delhi, dated 28 April 1930, charging thirteen people for the contravention of the Salt Tax Act XII, 1882.

1882-ஆம் ஆண்டு உப்புவரி ஆணை 12-ஐ மீறியதற்காக 28-4-1930-ம் நாளில் 13 நபர்களின் மீது குற்றம் சாட்டும் டில்லி முதன்மை ஆணையரின் ஆணை.

60. Gandhiji.

காந்திஜி

61. Telegram from the Government of Bombay, Special Branch, to the Home Department, Government of India, mainly reporting on the raid Dharasana salt works. It also contains information about the arrest of Mrs. Sarojini Naidu and Manilal Gandhi, 21 May 1930.

இந்திய அரசு, உள்துறைக்கு பம்பாய் மாநில அரசின் சிறப்பு பிரிவு தர்சனா உப்பு ஆணை மீது திடீர் சோதனை செய்ததற்கான அறிக்கை. மேலும் அவ்வறிக்கையில் திருமதி சரோஜினி நாயுடு மற்றும் மணிலால் காந்தி ஆகியோர் 21-5-1930-ல் கைது செய்யப்பட்டதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

62. Scenes of brutal police action on unarmed satyagrahis at Dharasana. There was widespread and unanimous condemnation of these unprovoked police excesses.

தர்சனாவில் ஆயுதமில்லா சத்தியாகிரஹிகள் மீதான காவல்துறையின் அராஜக நடவடிக்கை காட்சிகள். போலீஸின் அத்துமீறல் குறித்து மக்களிடையே பரவலான கண்டன எழுச்சி பரவுதல்.

63. Satyagrahi wounded during the lathi charge at Dharasana, being carried off for medical attention.

தர்ஸனாவில் காவல்துறையின் தடியடியில் காயமடைந்த சத்தியாகிரஹியை மருத்துவ சிகிச்சைக்காக கொணருதல்.

64. Telegram from Secretary of State for India, London to the Viceroy, Home Department, Simla, inquiring about brutal police action in dharsana, 28 June 1930.

28-6-1930 அன்று தர்ஸனாவில் காவல்துறையினரின் அராஜக செயலுக்கு விசாரணை கோரும் தந்தி, லண்டன், இந்திய அரசு செயலாளரிடமிருந்து சிம்லாவில் உள்ள, வைஸ்ராய், உள்துறைக்கு அனுப்பப்பட்டது.

65. Telegram from the Viceroy Home Department, Simla to the Secretary of State for India, London, replying to the queries posted by the former, attempting to defend police action in Dharasana, dismissing the same as mere 'exaggerations', 3 July 1930.

சிம்லாவில் உள்ள வைஸ்ராய், உள்துறை மூலமாக லண்டன், இந்திய அரசுச் செயலருக்கு தந்தி வாயிலாக தர்ஸனாவில் காவல் துறையின் நடவடிக்கை 'மிகைப்படுத்தப்பட்டுள்ளது' என கூறி விசாரணையை தள்ளுபடி செய்தல்.

66. Excerpts sourced from **Satyagraha Sangram,** a prescribed literature brought out by Panna Lal Verma from Allahabad. This lyrical composition titled, 'Dharasana Kand', recounts the valiant story of the brave non-violent activists of Dharasana, who never swerved from their ordained path of Satyagraha, even while faced with brutal police action.

அலஹாபாத்தைச் சேர்ந்த பன்னாலால் வர்மா சத்தியாகிரஹ சங்கராம்' என்னும் விலக்கப்பட்ட இலக்கிய ஏடு வெளியிடல். இதில் 'தர்ஸனா கந்த்' என்ற தலைப்பின் கீழ் ஆயுதமில்லா அகிம்சைவாதிகளான வீரமிக்க சத்தியாகிரஹிகள் மீது காவல்துறை நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை விவரிப்பதாக அமைந்துள்ளது.

67. Excerpts sourced from Satyagraha Sangram, a prescribed literature published by Pannalal Verma from Allahabad. This poetic composition entitled 'Badala Kand', draws inspiration not only from the actual breaking of the Salt Law but also from the heartening participation of people from all walks of life; Gujaratis, Sikh, Parsis, Marathis and women.

அலகாபாத்தைச் சேர்ந்த பன்னாலால் வர்மா அவர்கள் வெளியிட்ட 'சத்தியாகிரஹ சங்கராம்' என்ற கவிதைத் தொகுப்பில் உப்பு சட்டத்தை மீறுவது மட்டுமல்லாமல் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் குஜராத்தியர்கள், சீக்கியர்கள், பார்சிகள், மராட்டியர்கள் மற்றும் பெண்கள் உளப்பூர்வமாக பங்கெடுத்துக் கொள்வதை விவரிப்பதாக உள்ளது.

68. On 2 September 1946, Gandhiji handed a note to the new minister of the Interior Government, which bridged the transition from British rule to Independent India, urging them to formalize the immediate abolishment of the Salt Tax. This was finally achieved on 28 February, 1947.

உள்ளாட்சி அரசுக்கு 2-9-1946-ம் தேதியில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரமடைய இணைப்பு பாலமாக உப்பு வரிச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று காந்திஜி அறிக்கை அளித்தல். இறுதியாக தமது லட்சியத்தை 28-2-1947-ல் அடையப் பெற்றார்.

69. Notification on Salt, dated 30 March 1940, reducing the duty imposed on salt, under clause (a) of section 7 of the Indian Salt Act 1882 (XII of 1882)

1882-ஆம் ஆண்டு இந்திய உப்பு சட்டம் பிரிவு 7-ன் கீழ் உட்பிரிவு (ஏ)-ன்படி உப்பு மீதான வரிக்குறைப்பை அறிவிக்கும் 30-3-1940-ம் நாளிட்ட அறிவிக்கை.

70. The news article, excerpted from the newspaper **Harijan,** reporting the abolishing of tax on indigenously manufactured salt, April 27, 1947.

'ஹரிஜன்' தினசரி பத்திரிக்கையில் சுதேசி உப்பு தயாரிப்பின் மீதான வரியை ரத்து செய்யும் தலையங்கம் 27-4-1947-ல் வெளியிடுதல்.

71. Excerpts from Namak Ka Gola, a prescribed publication brought out by Pandit Ramachandra Updesha, Delhi. This poetic composition expostulates the cause of satyagraha and exhorts Indians to participate wholeheartedly in the salt satyagraha.

டெல்லியின், பண்டிட் ராமசந்திர உபதேஷா என்பவர் பெயரிட்ட 'நமக் கா கோலா' என்ற கவிதைத் தொகுப்பு. இதில் உப்பு சத்தியாகிரஹத்தில் இந்திய மக்கள் உறுதியாகவும், உளப்பூர்வமாகவும் பங்கெடுத்துக் கொண்டதை விவரிப்பதாக இருக்கிறது.

72. 'Karahi' or deep bottomed vessel used for preparing salt in Dandi during the Salt Satyagraha.

தண்டியை நோக்கிய உப்பு சத்தியாகிரஹ யாத்திரையின் போது உப்பு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட 'கராஹி' எனும் பாத்திரம்.

73. Entrance gate of the temple where Gandhiji offered prayers before breaking the Salt Law at Dandi.

தண்டியில் உப்பு சட்டத்தை மீறும் நடவடிக்கைக்கு முன்னதாக காந்திஜி பிரார்த்தனை செய்ய சென்ற கோவிலின் நுழைவு வாயில்.

74. The historic Dandi bridge Ahmedabad : Gandhiji crossed enroute to the Dandi March.

வரலாற்று சிறப்புமிக்க தண்டி அகமதாபாத் பாலம் - தண்டியாத்திரையின் போது காந்திஜி இந்த பாலத்தினை கடந்து சென்றார்.

75. Memorial marking the spot where Gandhiji broke the Salt Law by picking up a lump of natural salt, Dandi

தண்டியில் காந்திஜி கைநிறைய உப்பு அள்ளி உப்பு சட்டத்தை மீறிய செயல் நடைபெற்ற இடத்தில் நினைவுச் சின்னம்.

COPRESS
கோபிரஸ், கோவை - 18.